(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 67.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, சனவரி 06, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0294/ '10

1.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1991.08.25 ஆந் திகதி இ.போ.ச. மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு முதல் நியமனத் திகதி தொடக்கம் பணிக்கொடை செலுத்துவதற்கு இ.போ.ச. கடமைப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முதல் நியமனத் திகதி தொடக்கம் அவர்களுக்குப் பணிக்கொடை செலுத்த முடியாமலிருப்பதாகக் கூறி இ.போ.ச. நீதிமன்ற தீர்ப்பொன்றை கோரியிருந்ததா என்பதையும்,

(ii) அந்த நீதிமன்றத் தீர்ப்பு என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொழில் ஆணையாளரினால் அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், ஓய்வு பெற்ற ஊழியர்கள் எத்தனை பேருக்கு என்பதையும்,

(iii) செலுத்தவிருக்கும் மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அந்த ஓய்வு பெற்றோருக்கு பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) அந்தப் பணத்தைத் துரிதமாகச் செலுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0341/ '10

2.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பிற்கு உரித்தாயிருந்த கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவற்றில் அரசுடைமையாக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இக்கப்பல்கள் அரசுடைமையாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iv) தற்போது, அவ்வமைப்பிடம் எஞ்சியுள்ள கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) ஏனைய கப்பல்களுக்கு நேர்ந்தது என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0519/ '10

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 — 2009 வரையுள்ள ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலையையும் ஆரம்பிக்க முதலீடு செய்த பணத்தொகை மற்றும் ஒவ்வொரு முதலீடு மூலமாக தோன்றிய தொழில்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iii) மேற்படி முதலீடுகளும், அவற்றிலிருந்து உருவாகிய தொழில்களின் எண்ணிக்கையும் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0587/ '10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகலாவிய ரீதியில் செயற்படும் இலங்கைத் தூதரகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அந் நாடுகளில் இலங்கைத் தூதரகங்களைக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iii) இலங்கைத் தூதரகம் காணப்படும் ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கின்ற இலங்கையர்களது எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) ஏதாவது நாடொன்றில் இலங்கைத் தூதரகம் இல்லாத பட்சத்தில் அந்நாட்டில் வசிக்கின்ற இலங்கையர்களது நலன்களை எந்தத் தூதரகம் கவனிக்கிறது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்தினதும் மொத்த பணியாள் தொகுதியினரது எண்ணிக்கையையும், தொழிலுக்கமர்த்துதல் மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் ஆகியவற்றிற்கான வருடாந்த செலவுகள் யாவையென்பதையும்,

(ii) தூதரகத்திற்கான ஆதனம், மற்றும் தூதரக இல்லம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதற்கென செலுத்தப்பட்ட விலையையும் கொடுப்பனவுகள் எப்போது செலுத்தப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0681/ '10

5.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி உட்பட யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0701/ '10

6\.

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் மூலம் தேயிலைச் செய்கைக்காக உரமானியம் வழங்கப்பட்டுள்ள போதிலும், எதன் காரணமாக தென்மாகாணத்தில் தேயிலைக் காணிகளில் விளைச்சல் குறைவடையும் போக்கு ஏற்பட்டுள்ளது என்பதையும்,

(ii) மானியமாக வழங்கப்படும் இரசாயன உரத்தின் தரம் குறைவாக இருப்பது இந்த நிலமைக்கு காரணமாகும் என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையை தடுப்பதற்காக இது வரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்பதையும்,

(ii) தேயிலைக்காக பயன்படுத்தப்படும் இரசாயன உரத்தின் தரத்தை பரிசோதிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என்பதையும்,

(iii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0883/ '10

7\.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் புல்மூட்டைப் பிரதேசத்தில் ஐம்பது வருடங்களுக்கும் மேலான காலம் தொட்டு கமத்தொழிலில் ஈடுபட்டுவரும் முஸ்லிம் விவசாயிகளின் காணிகளுக்கு இதுவரை உரமப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பதையும்,

(ii) இந்நிலைமை காரணமாக விவசாய நிலங்களை துப்புரவு செய்கின்றபோது மற்றும் மேற்படி நிலங்களில் கமத்தொழிலை மேற்கொள்ளும் போது இந்த மக்களுக்கு பலவித இடையூறுகள் ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விவசாயிகளின் காணிகளுக்கு விரைவில் உரிமப் பத்திரங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0886/ '10

8.

கௌரவ விஜித ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டடத்தின் பபிலியவல, பல்லேகமவில் அமைந்துள்ள, மே.மா/கம்/ஆனந்தா வித்தியாலயத்தில், 2011 ஆம் ஆண்டின் முதலாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(ii) தகைமை பெற்ற மற்றும் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளினதும் பெயர், விலாசம், உரிய பிரிவு மற்றும் புள்ளிகள் யாவை என்பதை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அமைச்சின் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பெயர் பட்டியல்களின் தகவல்களை உறுதி செய்வதற்கு கிராம உத்தியோகத்தரின் கடிதம் தேவைப்படுகின்றதா என்பதையும்,

(ii) கிராம உத்தியோகத்தரின் கடிதம் காணப்படாமையினால் மட்டும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்வதை நிராகரிப்பதற்கு நேர்முகப் பரீட்சைக் குழுவுக்கு இயலுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிராம உத்தியோகத்தரின் கடிதத்தைக் கொண்டிராத சில விண்ணப்பதாரிகள், மீண்டும் நேர்முகப் பரீட்சைக்காக வேறொரு தினத்தில் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதையும்,

(ii) இது குறித்து முறையான அறிவித்தல் செய்யப்படாமையினால், விண்ணப்பதாரியொருவர் அநீதிக்கு உள்ளானார் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) (i) இதன்படி, அநீதிக்கு உள்ளான அவ்விண்ணப்பதாரிக்கு, நீதியை நிறைவேற்றி வைப்பதற்கும்,

(ii) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0520/ '10

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சேவையாற்றி வருகின்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதைம்,

(iii) இவ்வுத்தியோகத்தர்கள் நிறைவேற்றும் சேவைகள் யாவையென்பதையும்,

(iv) சமுர்த்தி உத்தியோகத்தரொருவரின் மாதாந்த சம்பளம் மற்றும் அந்த மாவட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரினதும் சம்பளத்தைச் செலுத்த மாதந்தோறும் செலவாகும் மொத்தப்பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுகின்ற சேவை போதுமானதென அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0588/ '10

10\.
கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியல்வாதிகள் அல்லது அரச அலுவலகங்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் செலவினத்திற்காக இலங்கைத் தூதரகங்கள் தமது நிதியிலிருந்து பணத்தை செலவளிக்க வேண்டியுள்ளதா என்பதையும்,

(ii) ஆம் எனில், கடந்த ஆறு வருடங்களில் அத்தகைய தூதரங்களினால் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையை, வருடாந்த அடிப்படையிலும்,

(iii) மேற்படி கொடுப்பனவுகளை மேற்கொண்டமைக்கான நோக்கத்தையும்,

(iv) அதிகாரிகளின் தனிப்பட்ட தேவைகளுக்காகவா அக்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன என்பதையும்,

(v) அக் கொடுப்பனவுகள் தனிப்பட்ட காரணங்களுக்காக வழங்கப்பட்டிருப்பின் அவை வழங்கப்பட்ட நபர்களையும், எந்தத் திகதியில், எந்தக் காரணத்திற்காக வழங்கப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0703/ '10

11\.
கௌரவ புத்திக பத்திரண,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் ஹக்மனை பிரதேச சபையினால் நிருவாகிக்கப்படும் குடிநீர் வழங்கல் திட்டத்தின் வினைத்திறனற்ற நீர் விநியோகம் காரணமாக பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த நீர் வழங்கல் திட்டத்திலிருந்து புதிதாக குடிநீர் இணைப்புக்கான பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) புதிய விண்ணப்பதாரர்களுக்கு குடிநீர் வசதிகள் எப்போது வழங்கப்படும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஹக்மன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அதிகரித்துவரும் நீர் நுகர்வுக்கு ஏற்றவகையில் குடிநீர் வழங்குவதற்கான கருத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அதற்காக பயன்படுத்தப்படும் நீர் மூலங்கள் எவை என்பதையும்,

(iii) தற்போது நீர் வழங்கலில் நிலவும் வினைத்திறன் இன்மையை நீக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்,

(iv) அவை எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0521/ ’10

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செயவதற்கென ஒரு வருடத்துக்கு அரசாங்கம் வழங்கும் நிதித் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ள பணத்தொகை போதுமானதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0589/ ’10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் கொள்கை அளவில் தனியார் மயமாக்கலுக்கு எதிராக உள்ளதா என்பதையும்,

(ii) நாட்டின் கண் கூடற்ற சொத்துக்களுக்கு பெறுமதியுண்டா என்பதையும்,

(iii) நாட்டின் கண்கூடற்ற சொத்துக்கள் எவை என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி, தொலைக்காட்சி, செய்மதி ஒளிபரப்புச் செயற்படுத்துனர்கள் கையடக்கத் தொலைபேசிச் செயற்படுத்துனர்கள், அகலப்பட்டை செயற்படுத்துனர்கள், மற்றும் வாசலில் இருந்து வீட்டிற்கு (DTH) சேவை வழங்குனர்களெல்லாம் உரிமம் வழங்கும் அதிகார சபையின் பெயர் என்ன என்பதையும்,

(ii) கடந்த ஆறு வருடங்களில் மேற்படி வகைப்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட எல்லா உரிமங்களும் யாவை என்பதையும்,

(iii) அவ் உரிமங்களை வழங்குவதால் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி உரிமங்கள் விலை மனுகோரல் அடிப்படையில் வழங்கப்படலாம் என்பதையும்,

(ii) மேற்படி உரிமங்களை வழங்கும் தற்போதைய முறைமையானது ஒரு இரகசியமான தனியார் மயமாக்கல் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — குழு.

*3.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தச்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

*7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

8.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.